# POST MATRIC SCHOLARSHIP (PMS) for SC, SCA, ST, SCC STUDENTS IN TAMILNADU

## போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை பற்றிய சிறு விளக்கம்:

### 1. போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை என்றால் என்ன?

அண்ணல் அம்பேத்காரால் 1943-ல் கொண்டு வரப்பட்டு கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக மத்திய, மாநில அரசுகளால் சான்றோர்/ ஆன்றோர் (SC/ST- பட்டியல் இன/ பழங்குடி) மாணாக்கர்களுக்காக செயல்படுத்தி வருகிற உயர் கல்வி உதவித்தொகைத் திட்டம்.

### 2. போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடைத் திட்டத்தின் நோக்கம் என்ன ?

சான்றோர்/ஆன்றோர் (SC/ST) மாணாக்கர்கள் பத்தாம் வகுப்பிற்குப் பிறகு படிக்கக்கூடிய உயர்கல்வி அதாவது 11 ஆம் வகுப்பிலிருந்து முதுநிலை படிப்பு வரை, அந்தப் படிப்பை *'முடிக்கும்வரை'* முழுக் கட்டணத்தையும் கல்விக்கொடையாக வழங்க வேண்டும்.

### 3. போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை பெறுவதற்கான தகுதிகள் என்ன?

சான்றோர் (SC/SCA), ஆன்றோர் (ST), & மதம் மாறிய கிருத்துவ (SCC) மாணவர்களாக இருக்க வேண்டும். இவர்களது பெற்றோர் *ஆண்டு வருமானம் ரூ. 2.50 லட்சத்திற்கு* மிகாமல் இருக்க வேண்டும். இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.

### 4. என்ன அளவில் கல்விக்கொடை வழங்கப்படுகிறது?

உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட "கல்வி கட்டண நிர்ணயக் குழு" (Fee Fixation Committee) நிர்ணயித்துள்ள கல்விக்கட்டணம் முழுவதுமாகவும், பேணல் படி, புத்தக வங்கியும் கல்விக்கொடையாக வழங்கப்படுகிறது

### 5. என்னென்ன கட்டணங்கள் இந்த கல்விக்கொடையின் கீழ் வரும்?

கல்வி நிறுவனத்திற்கு மாணவரால் *கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய* பதிவுக்கட்டணம், கற்கைக் கட்டணம், விளையாட்டு கட்டணம், நூலகம், பத்திரிக்கை, மருத்துவ பரிசோதனை, மாணவர் சங்கம், கல்விச்சுற்றுலா, ஆய்வேடு தட்டச்சு மற்றும் அச்சிடுவதற்கு, புத்தக வங்கி, இவை அனைத்தும் அடங்கும்.

### 6. ஒரு குடும்பத்தில் எத்தனை பேருக்கு இந்த கல்விக்கொடை வழங்கப்படும்?

சான்றோர்/ஆன்றோர் (SC/ST) ஐச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இந்த கல்வி உதவித் தொகை முழுவதுமாக பாகுபாடின்றி வழங்கப்படும்; உதாரணத்திற்கு ஒரு குடும்பத்தில் 5 பிள்ளைகள் இருந்தால் ஐவருக்குமே முழுவதுமாக கல்விக்கொடை வழங்கப்படும்.

7. **PMS** கல்விக்கொடையாக என்ன/எவ்வாறு கிடைக்கும்?

கற்கைக் (Tuition Fee) கட்டணத்தில் 40% தமிழ்நாடு அதி திராவிடர் நலத்துறை மூலமும் மீதி உள்ள 60% கல்வி உதவித்தொகையானது ஒன்றிய அரசின் சமூக நீதி அதிகாரமளிப்புத்துறை (Dept. of Social Justice) மூலமும் இரண்டு தவணைகளில் மாணாக்கர் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும். பேணல் படி (Maintenance Grant) மாணாக்கர் வங்கிக் கணக்கிற்கும், புத்தக வங்கி (Book Bank) கல்லூரி வங்கிக் கணக்கிற்கும் தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறையால் அனுப்பி வைக்கப்படும்.

8. எந்தெந்த படிப்புகளுக்கு, எந்த வகைக் கல்லூரிகளுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை வழங்கப்படுகிறது ?

மத்திய/மாநில பல்கலைக்கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துப் பாடப் பிரிவுகளுக்கும், அரசு (Govt)/அரசு உதவி பெறும் (Govt Aided) கல்லூரிகள், தனியார் சுயநிதி கல்வி நிறுவனங்கள் (Self-Financing Colleges), உட்பட அனைத்து வகையான கல்லூரிகளுக்கும் கல்விக்கொடை வழங்கப்படுகிறது.

MBBB/BDS/BSMS/BAMS/BUMS/BNYS/BHMS/ Diploma/Polytechnic, B.E/B.Tech, M.E/M.Tech, B.Ed/M.Ed, MBA/MCA, இத்தகைய படிப்புகளுக்கு முழுமையான கல்விக் கட்டணம் வழங்கப்படுகிறது. ஆனால் கலை/அறிவியல் (Arts & Science), பிரிவு பாடங்களுக்கும், பிற பாடங்களுக்கும் (B.Sc. Nursing/Pharmacy/BPT) ஒரு குறிப்பிட்ட அளவு தான் கிடைக்கிறது.

9. இதற்கான அரசாணைகள் ஏதேனும் உண்டா ?

ஆதி திராவிடர் நலத்துறை அரசு ஆணை எண் 6 Dt: 9/1/2012, அ.ஆ. எண் 63 Dt: 25/6/2012, அ.ஆ.எண்: 92, Dt:11/9/2012 அ.ஆ.எண்:16 Dt:24/2/2014, அ.ஆ.எண்: 72, Dt: 15/10/2021, அ.ஆ.எண்:96, Dt:25/11/2021, அ.ஆ.எண்:106, Dt:14/12/2021 ஆகிய அரசாணைகளின் படி சான்றோர்/ ஆன்றோர் (SC/ST) மற்றும் மதம் மாறிய கிருத்துவ (SCC) மாணாக்கர்களின் கல்விக்கட்டணத்தை அரசே செலுத்தும். போஸ்ட் மெட்ரிக் கல்விக்கொடை வழிகாட்டி– 2021-2026, சமூக நீதி & அதிகாரமளிப்புத் துறை (Min. of Social Justice & Empowerment) இந்திய ஒன்றிய அரசு.

## I. TUITION FEE (கற்கைக் கட்டணம்)

| S.NO | படிப்பு வாரியாக வழங்கப்படும் கல்விக்கொடை | |
|---|---|---|
| | படிப்பு | கல்விக்கொடை / வருடம் (Rs) (சுயநிதி கல்வி நிறுவனங்கள்) |
| 1 | M.B.B.S, | 4.5 Lakh/12.50 Lakh |
| 2 | P.G Medical | 2,20,000 |
| 3 | P.G.Medical (Non Clinical) | 1,60,000 |
| 4 | P.G Diploma | 1,30,000 |

| | | |
|---|---|---|
| 5 | B.D.S | 2,50,000 |
| 6 | M.D.S (Clinical) | 2,20,000 |
| 7 | M.D.S ( Para Clinical) | 1,60,000 |
| 8 | M.D Homeo | 3,50,000 |
| 9 | BSMS Siddha /BAMS Ayurveda/ BNYS Naturopathy/ BHMS Homeopathy/BUMS | 2,50,000 |
| 10 | B.Sc Agri | 85,000 |
| 11 | B.E/B.Tech/B.Arch | 50,000/85,000 |
| 12 | M.E /M.Tech/ M.Arch/Plan | 50,000 |
| 13 | MBA/MCA | 36,000 |
| 14 | Diploma/Polytechnic | 37,500 |
| 15 | D.T.Ed/B.P.Ed/M.P.Ed | 25,000 |
| 16 | B.Ed/M.Ed | 30,000 /47,500 |
| 17 | B.Pharm/ M.Pharm | 43,000/70,000 |
| 18 | B.Sc Nursing/ M.Sc Nursing | 45,000/75,000 |
| 19 | B.P.T/BOT/M.P.T/M.O.T | 33,000/50,000 |
| 20 | U.G in Arts & Science (BA/B.Com/B.Sc) | 1,350 – 4,750 |
| 21 | P.G in Arts & Science (MA/M.Com/M.Sc ) | 1,350 – 4,750 |
| 22 | Allied Health /Paramedical Courses | Fee Committee yet to be set up |
| 23 | ITI/Certificate Courses | 12,000 |
| 24 | Ph.D (Full Time) 1600 Students | 1 Lakh |
| 25 | Overseas Scholarship (Limited Nos) | 36 Lakhs/ Whole Course |

## II. MAINTENANCE GRANT (பேணல் படி) / YEAR/ Student

| **NAME OF COURSE** | **Hostellers (Rs)** | **Day Scholars (Rs)** |
|---|---|---|
| MBBS/BDS | 13,500 | 7000 |
| B.E/B.Tech/M.E | 13,500 | 7000 |
| Diploma | 9500 | 6500 |
| Arts & Science | 6000 | 3000 |

## III. BOOK GRANT (புத்தக வங்கி): SET/2 Students (in Rs)

| MBBS/B.E | VETRINARY SCIENCE | AGRI COURSES | DIPLOMA | P.G COURSES |
|---|---|---|---|---|
| 7500 | 5000 | 4500 | 2400 | 5000 |

வேண்டுகோள்:. இந்த கல்வி உதவித்தொகையினால் பயன்பெறும் மாணவர்கள் இது பற்றிய செய்தியை பிற மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தெரிவிக்க வேண்டுகிறோம் .

*மேலும் விவரங்களுக்கு;*

திரு.இரா.கிருத்துதாசு காந்தி IAS, Rtd. **|** மா. பரதன் **|** சந்திரமோகன்

மேனாள் கூடுதல் தலைமைச் செயலர்.**| 9443117665| 9677758358 (Wapp)**

இந்த கல்வி உதவித்தொகை தொடர்பாக அணுக வேண்டிய அதிகாரிகள்:

1. அந்தந்த மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரி
2. ஆணையர், ஆதி திராவிடர் நல இயக்குனரகம், எழிலகம், சேப்பாக்கம் சென்னை
   PHONE: 044 28589855
3. செயலர், ஆதி திராவிடர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை
   PHONE: 044 25671848
4. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், தலைமைச் செயலகம், சென்னை
   PHONE: 044 25671021

<u>தொகுப்பு</u>:

அம்பேத்கர் கல்வி நூற்றாண்டு இயக்கம் (அகம்),
சென்னை.
2022-2023